OS: 629/2018

Date:18.08.2025

பெயர் :சிவகாமி

வாதி தரப்பு சாட்சி 1.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>

1. கூடுதல் பிரமாணப் பத்திரிக்கையில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டது என்றால் ஆமாம். 17.10.1957ம் தேதியன்று என் தகப்பனார் கிரையம் பெற்ற சொத்தின் ஒரு பகுதியை சுந்தரம் என்பவருக்கு விற்றதாக ஒரு கிரைய பத்திரம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. 17.10.1957ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சொத்து விவரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி பத்திரத்தில் உள்ள சொத்துதான் தாவா சொத்துதான் என்றால் ஆமாம். மேற்படி பத்திரத்தில் உள்ள சொத்து கிராம நத்த புறம்போக்கு என்றால் இல்லை. என் அப்பா கிரையம் கொடுத்து வாங்கியதுதான். புறம்போக்கு இல்லை.

2. என் அப்பா காலி மனையாக வாங்கினாரா அல்லது சதுரடி கண்டு வாங்கினாரா என்றால் எனக்கு தெரியவில்லை. 1700 சதுரடி தற்போது இருக்கிறது. 17.10.1957ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தில் சர்வே எண் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று தெரியுமா என்றால் எனக்கு படிப்பு அறிவு இல்லை. என் மகன்கள் படித்து சொன்னார்கள். சர்வே எண் இருக்கிறதா, இல்லையா என்று எனக்கு நினைவில்லை. அந்த பத்திரத்தில் கிழமேலடி எவ்வளவு தென்வடலடி எவ்வளவு என்று தெரியுமா என்றால் தெரியாது.

3. 17.10.1957ம் தேதி என் அப்பா கிரையம் பெற்ற சொத்தில் சர்வே எண்ணே இல்லை என்றால் சரியல்ல. எனக்கு சொன்னார்கள் எனக்கு மறந்துவிட்டது. 17.10.1957ம் வருடத்திய கிரைய பத்திரத்தில் சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்பதால் தாவா சொத்திற்கும், அந்த கிரைய பத்திரத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. 12.11.1962ல் என் தகப்பனார் வாங்கிய சொத்தின் சில பகுதியை சுந்தரம் என்பவருக்கு விற்ற பத்திரத்தை பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4. மேற்படி பத்திரத்தை தாக்கல் செய்துவிட்டு தற்போது இல்லை என்று எதிர்மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் எனக்கு தெரியவில்லை. என் தகப்பனர் சுந்தரத்திற்கு விற்ற கிரைய பத்திரத்திலும் கூட தாவா சொத்தின் சர்வே எண் குறிப்பிடபடவில்லை

என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள 12.11.1962ம் தேதியிட்ட பத்திரத்திற்கும் தாவா சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. சுந்தரம் கிரையம் பெற்ற 12.11.1962ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தில் கருப்பூர் கிராம நந்தத்திற்கு பாத்தியப்பட்ட சொத்தை என்று எழுதப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. தற்போது தான் பத்திரம், பட்டா எல்லாம் இருக்கிறது என்றும் அந்தகாலத்தில் எதுவும் இல்லை என்றும் சாட்சி கூறுகிறார்.

5. மேற்கண்ட இரண்டு பத்திரத்திலும் கண்ட சொத்துக்கள் தாவா சொத்து என்று காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அ.வ.எண்.367/1982 என்ற மேட்டூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் தீர்ப்பு நகல், வழக்குரை நகல் ஆகியவைகளை தாக்கல் செய்திருக்கும் நிலையில் அதன் விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. யார் யார் மீது என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. அ.வ.எண்.367/1982 என்ற மேட்டூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் தீர்ப்பு நகல், வழக்குரை நகல் ஆகியவைகளை தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் ஆமாம். அதை படித்து பார்த்திருக்கிறேனா என்றால் நீங்கள் படித்து காட்டினால்தான் தெரியும், எனக்கு படிக்கதெரியாது.

6. நான் படித்துபார்த்துவிட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையா என்றால் இல்லை படித்ததை கேட்டேன். என்ன சர்வே எண்ணிற்கு யார் யார் மீது வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் எனக்கு நினைவில்லை. பிரதிவாதி மேட்டூர் உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.367/1982 வழக்கை சர்வே எண்.62/1க்கு தான் தாக்கல் செய்தார் என்று தெரியும் என்றாலும் தற்போது எனக்கு தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. படித்து காட்டினார்கள் மறந்துவிட்டேன்.

7. மேட்டூர் உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வஎண்.368/1982 என்ற எண்ணில் 2ம் பிரதிவாதி கிருஷ்ணன் பெயரில் வெங்கடேசன் என்பவர் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரியல்ல. அ.வ.எண்.368/1982 வழக்கை சர்வே எண்.62/1க்கு தான் தாக்கல் செய்தார் என்று தெரியும் என்றாலும் தற்போது எனக்கு தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் மேற்கண்ட விவரங்கள் தெரியும் என்று சொல்லிவிட்டு தற்போது தெரியாது என்று மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8. நான் அ.வ.எண்.367/1982 ன் வழக்குரை, அ.வ.எண்.368/1982 ன் வழக்குரை, மற்றும் அ.வ.எண்.367/1982 வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடம் மற்றும் 367/1982, 368/1982 ஆகிய வழக்குகளின் பொதுவான தீர்ப்புரை மேற்கண்ட அனைத்தையும், தாக்கல் செய்திருக்கும் நிலையில் மேற்கண்ட அனைத்தும் சர்வே எண்.62/1 ற்கு தான் சம்பந்தப்பட்டது என்றாலும் இந்த தாவாவிற்கு சம்பந்தப்பட்டது இல்லை என்றாலும் சரியல்ல. கூடுதல் பதில் உரையில் தாக்கல் செய்யத்திருக்கும் அனைத்து ஆவணங்களும் தாவாவிற்கு சம்பந்தப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை சர்வே எண்.62/6 ல் தான் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் எனக்கு சர்வே எண் தெரியாது.

9. எனது கூடுதல் பிரமாணப்பத்திரிக்கையில் 04.01.1994 ல் என் தாயார் ஆண்டியம்மாள் மற்றும் கிருஷ்ணன் ஆகியோர்களுக்கு மனை தோராயப் பட்டா கொடுத்தாக கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால்  சரியல்ல. நான் எனது அப்பா பெயரில் சொத்து இருப்பதாகதான் நினைத்து கொண்டிருக்கிறேன். இந்த விவரங்கள் எனக்கு தெரியாது. கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் மேற்கண்ட விவரங்கள் குறித்து சொல்லிவிட்டு தற்போது மாற்றி சாட்சியம் அளிக்க இயலாது என்றால் நான் மாற்றி சாட்சியம் அளிக்கவில்லை.

10. எனக்கு என் தாயார் பெயரிலும், 2 ம் பிரதிவாதி பெயரிலும் பட்டா இருப்பது தெரியும் என்றாலும், நான் தெரிந்து கொண்டே தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. பட்டா 2 ம் பிரதிவாதி பெயரிலும், என் தாயார் பெயரிலும் இருப்பது தெரிந்தும் கூட எந்த மேல்முறையீடும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு பட்டா இருப்பதே தெரியாது. வருவாய் துறை அதிகாரிகளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

11. நான் கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் 5 வது பாராவில் தாவா சொத்து கிராம நத்தமாக இருந்ததாக குறிப்பிட்டு சொல்லிவிட்டு தற்போது தெரியாதுஎன்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் 5 வது பாராவில் என் அப்பா பெயரில் பட்டா இல்லை என்று சொல்லியிருக்கிறேன் என்றால் ஆமாம். அந்த காலத்தில் பட்டா இல்லை பத்திரம் மட்டும் தான் அதனால் சொல்லியிருக்கிறேன். எனது கூடுதல் பிரமாணப்பத்திரிக்கையில் கிராம நத்தமான தாவா சொத்து கோவிந்தன் இறந்த பிறகு

2ம் பிரதிவாதி மற்றும் எனது தாயார் அனுபவத்தில் இருந்ததால் அவர்கள் பெயரில் வருவாய் துறையினர் பட்டா வழங்கியதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

12. எனது கூடுதல் பிரமாணப்பத்திரிக்கையின் 6வது பாராவில் எனது தந்தை கோவிந்தன் கிரையம் பெற்ற 17.10.1957ம் தேதிய கிரைய பத்திரம் அடி முதலே செல்லாது என்று சொல்லியிருக்கிறேன் என்றால் அப்படி சொல்லவில்லை. அதே பாராவில் எங்களுக்கு தாவா சொத்தில் எந்த சுவாதீனமும் இல்லை என்று ஒப்புக்கொண்டு சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. பாரா எண்7ல் தாவா சொத்து 62/6 என்பது நத்தம் என்பதும், புதிய சர்வே எண்.270/6ல் 1763 சதுரடிகள் கொண்ட மனை நிலம் வருவாய் துறைக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும் என்று குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

13. அதே 7வது பாராவில் 1763 சதுரடி நத்தம் மனை நிலம் வருவாய் துறைக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும் என்றும், யார் அனுபவத்தில் இருக்கிறார்களோ அவர்கள் பெயரில் பட்டா வழங்க வருவாய் துறைக்கு மட்டுமே அதிகாரம் உள்ளது என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் 8வது பாராவில் கோவிந்தன் என்பவர் உடல் நிலை சரியில்லாமல் இறந்துவிட்டார் என்பது உண்மைதான் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் ஆமாம்.

14. அதற்கு அடுத்த வரியில் கூட்டு குடும்பத்தில் மூத்தவர்கள் ஆகிய 1, 2 பிரதிவாதிகள் பெயரில் பட்டா கொடுத்ததாக குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் 11வது பாராவில் வழக்கு மூலமே தவறனது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் 12வது பாராவில் ஆதியில் நத்தம் புறம்போக்காக இருந்து அதன் அடிப்படையில் சுவாதீனத்தில் இருந்த 1, 2 பிரதிவாதிகள் பெயரில் நத்தம் வட்டாட்சியர் அவர்கள் அரசு வழிகாட்டியின் படி தாவா இடத்தை பார்வையிட்டு 1, 2 பிரதிவாதிகள் பெயரில் நத்தம் நிலவரித்திட்டத்தின் கீழ் பட்டா வழங்கியுள்ளார்கள் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

15. நான் ஒப்படைத்திருக்கும் அனைத்து ஆவணங்களுக்கும் இந்த வழக்கு சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில்

1, 2 பிரதிவாதிகள் தான் தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருப்பதாகவும் அதன் அடிப்படையில் அவர்களுக்கு பட்டா கொடுத்ததாகவும், நானே கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியிருப்பதால் தாவா சொத்தில் நான் கேட்டதுபோல எனக்கு எந்தவித பாகமும் கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல. எனது சொத்துவிவரத்தில் சர்வே எண்.62/6 என்று குறிப்பிட்டிருக்கிறேனே தவிர என்ன அளவு என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனவே தாவா தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

(ஒப்பம்/-T.மாலதி),
சார்பு நீதிபதி,
ஓமலூர்.